


- வாழ்வோம்

தமிழ்நாட்டில், `திராவிட மாடல் அரசு' ஆட்சியில் இருந்தவரை போதைப்பொருள் புழக்கத்தை ஒழிக்க, கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால், தேர்தல் பரப்புரைகளில் உண்மைகளைத் திரித்து, பொய் குற்றச்சாட்டுகளை அள்ளி வீசி, ஆட்சியில் அமர்ந்திருக்கும் ஜோசப் விஜய், போதைப்பொருள் புழக்கத்திற்குப் புத்துயிர் கொடுக்கிறாரா எனச் சந்தேகம் ஏற்படும் அளவுக்குச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

சங்ககிரியில் கஞ்சா விற்ற த.வெ.க. நிர்வாகி, ஈரோடு, திருப்பூரில் குட்கா வைத்திருந்த த.வெ.க. நிர்வாகிகள் என அங்கொன்றும் இங்கொன்றுமாக வந்த செய்திகளின் உச்சமாக நாகையில், த.வெ.க. நிர்வாகி வீட்டில், 135 கிலோ மெத்தபெட்டமைன் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பில் த.வெ.க.வின் நாடகம்!

இதுதொடர்பாகப் பதிவிட்டுள்ள மூத்த பத்திரிகையாளர் அரவிந்தாக்ஷன், ``தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே இல்லாத வகையில், உயர்தர போதைப்பொருளான மெத்தபெட்டமைன் 135 கிலோ TVK-ன் நாகை மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பூபாலன் என்பவர் வீட்டில் இருந்து, நிதி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் DIRECTORATE OF REVENUE INTELLIGENCE அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தியச் சந்தை மதிப்பு, ஒரு கிலோ ரூ.5 கோடி வரை விற்பனையாகிறது. அப்படியென்றால், இதன் மொத்த மதிப்பு ரூ.675 கோடி ரூபாய். இவ்வளவு பெரிய ஸ்டாக் எங்கிருந்து வந்தது? யாருக்கெல்லாம் விற்பனை செய்துள்ளனர்/செய்யத் திட்டமிட்டிருந்தனர் என NARCOTICS CONTROL BUREAU, CHENNAI முழுமையாக விசாரிக்க வேண்டும்.

இந்தச் சோதனை மற்றும் பறிமுதல் குறித்து, ஒன்றிய நிதியமைச்சகம், DRI விரிவான PRESS RELEASE வெளியிட வேண்டும். இதன் பின்னால் இருக்கும் சட்டவிரோத பணப்பரிமாற்ற விவகாரம் குறித்து, அமலாக்கத் துறை இயக்குநரகம் விசாரணை நடத்தவேண்டியது மிகவும் அவசியம். கைதுசெய்யப்பட்டுள்ள பூபாலன், த.வெ.க.வின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஃப்ளாஷ்பேக்



நெருக்கடியான நேரத்தில் துணிச்சலுடன்...

1993-ஆம் ஆண்டு, நான் 'தினகரன்' பத்திரிகையில் பணியாற்றிக்கொண்டிருந்தேன். அந்த ஆண்டு, கழகத்தை விட்டுப் பிரிந்து, வைகோ தனிக்கட்சி தொடங்கினார். 'தினகரன்' நிறுவனர் ஐயா கே.பி.கே.வும் வைகோ பக்கம் சென்றுவிட்டார். அதனால், 'வேலை போனாலும் பரவாயில்லை' என்று 'தினகரன்' அலுவலகத்தில் தி.மு.க.வுக்கு ஆதரவாகவும் வைகோவுக்கு எதிராகவும் கருத்துகளை முன்வைப்போம். அப்போது என்னுடன் பணியாற்றிய பெ.தி.சண்முகம், (கலசப்பாக்கம் எம்.எல்.ஏ. பெ.திருவேங்கடம் அவர்களின் மகன்) கலைஞரைச் சந்திக்கலாம் என அழைத்துச்சென்றார். அப்படி ஒரு நெருக்கடியான நேரத்தில், துணிவுடன் கலைஞரைச் சந்தித்து மரியாதை செய்த காட்சி. படத்தில் பெ.தி.சண்முகம், மற்றொரு நண்பர் சுப்பிரமணி ஆகியோர் உள்ளோம்.



வே.கல்யாணகுமார்

- வே.கல்யாணகுமார், பல்லாவரம், சென்னை.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

காவத்தின் குரல்

இடஒதுக்கீட்டு உரிமையைத் தடுப்பது மாபெரும் அந்தி!

அரசியலமைப்புச் சட்டப் பிரிவு-25. ஒரு குடிமகன், தான் விரும்பிய மதத்தைப் பின்பற்றவும் பரப்பவும் முழுச் சுதந்திரம் அளிக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கும் சமீபத்திய தீர்ப்பொன்று, இந்த அடிப்படை உரிமையைத் தகர்க்கும் விதமாக, அரசியலமைப்புக்கு முற்றிலும் முரணாக அமைந்திருக்கிறது.

'பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஓர் இந்து, இஸ்லாமிற்கு மதம் மாறினால், ஏற்கெனவே இஸ்லாமிய சமூகத்துக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற முடியாது' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை முன்வைத்து, இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டு உரிமையை நிலைநாட்டவேண்டிய த.வெ.க. அரசு, தனது வலுவற்ற வாதங்களால் மீண்டும் ஒரு முறை இஸ்லாமியர்களை வஞ்சித்திருக்கிறது.

■ வழக்கின் பின்னணி

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த பரமசிவம் என்பவர், 2015-ஆம் ஆண்டு, இஸ்லாம் மதத்தைத் தழுவினார். அவர், தன் பெயரை சமீர் அகமது என மாற்றிக் கொண்டார். இஸ்லாத்தில் 'லெப்பை'ப் பிரிவு நடைமுறையை அவர் பின்பற்றுவதால், தன்னுடைய இரண்டு குழந்தைகளுக்கும் அதற்குரிய சான்றிதழை வழங்க வேண்டுமென்று 2020-இல் கயத்தார் வட்டாட்சியருக்கு விண்ணபித்துள்ளார். ஆனால், அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்படவே, 2022-ஆம் ஆண்டு, உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடர்ந்தார். அந்த வழக்கில், இந்த ஆண்டு ஜூன் 25-இல் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.பி.பாலாஜி அமர்வு, அவரது கோரிக்கையை நிராகரித்துள்ளனர். அத்துடன், 09.03.2024 அன்று 'திராவிட மாடல் அரசு' வெளியிட்ட மிக முக்கிய அரசாணை ஒன்றையும் ரத்துசெய்தது, உயர் நீதிமன்ற மதுரைக் கிளை.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் அல்லது பட்டியல் சாதிப் பிரிவுகளில் இருந்து இஸ்லாம் மதத்துக்கு மாறியவர்களைப் 'பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம் (BCM)' என வகைப்படுத்திச் சான்றிதழ் வழங்குவதற்கான அரசாணைதான் அது. 'மதம் மாறுவோரை, அரசாங்கமே ஏதேனும் ஒரு பிரிவில் சேர்த்து ஆணை வழங்கவில்லை. மாறாக, விரும்பி இஸ்லாமியராக மாறுவோரை, இந்த ஏழு பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் இணைத்துக் கொள்வது ஜமாத் நிர்வாகத்தின் பொறுப்பு. மார்க்கம், அவரை ஒரு பிரிவில் ஏற்றுக்கொண்டாலும், நீதிமன்றம் அப்படியெல்லாம் ஏற்றுக்கொண்டு இடஒதுக்கீடு கொடுக்க முடியாது' என்று தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

■ அரசாணையின் பின்னணி

தமிழ்நாட்டில் 2012-ஆம் ஆண்டு வரை, பிற மதங்களில் இருந்து பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள், இஸ்லாம் மதத்திற்கு மாறினால், அவர்கள் ஏற்கெனவே பெற்ற சாதிச் சான்றிதழ் மாற்றப்பட்டு, 'முஸ்லிம் ராவுத்தர்' அல்லது 'லெப்பை' என்ற புதிய சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆனால், இதன்வழியே, பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லிம்) எனக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிமை அளிக்கப்பட்டது. ஆனால், 2012-ஆம் ஆண்டுக்குப் பிறகு மதம் மாறிய முஸ்லிம்களுக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்படவில்லை.

சமீர் அகமதுவைப் போல பல குடும்பங்கள் சான்றிதழ் பெற முடியாத நிலையில்



இருக்கின்றனர். அவர்களை 'இதரர்' என்று வகைப்படுத்தி, மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காகவே, இடஒதுக்கீட்டு உரிமை பறிக்கப்பட்டுவந்தது. இந்த அநீதியை எதிர்த்து, பத்தாண்டுகளுக்கும் மேலாகவே இஸ்லாமிய மார்க்கத் தலைவர்கள் பலரும் குரல் எழுப்பி வந்தனர். அந்தக் குரலுக்குச் செவிசாய்த்தவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். மதம் மாறும் முஸ்லிம்களுக்கு பி.சி.எம். சான்றிதழ் வழங்க, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணையை வெளியிட்டார் கழகத் தலைவர். ஆனால், 'அந்த ஆணை செல்லாது' என்று தீர்ப்பளித்தது உயர் நீதிமன்ற மதுரைக் கிளை.

அந்த உத்தரவை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய கழகத் தலைவர் உரத்து முழங்கினார். இஸ்லாமிய சமூகமும் ஒருமித்த குரலை வெளிப்படுத்தியது. ஆனால், உச்ச நீதிமன்றத்தில் வலுவான வாதங்களை முன்வைக்காமல், மதம் மாறும் முஸ்லிம்களின் உரிமையைப் பறிகொடுத்திருக்கிறது, இந்த த.வெ.க. அரசு. 'இஸ்லாத்தைத் தழுவும் ஒருவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) என்ற தகுதியைக் கோர முடியாது' என்ற உயர் நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவை, எந்த நியாயமும் இல்லாமல் அப்படியே உறுதிசெய்திருக்கிறது, உச்ச நீதிமன்றம்.

'ஒருவர் இஸ்லாம் மதத்திற்கு மாறுவதால் மட்டுமே மாநிலத்தில் உள்ள ஏழு முஸ்லிம் பிற்படுத்தப்பட்ட சமூகங்களில் ஒன்றைச் சேர்ந்தவராகிவிட



முடியாது. அவர் முன்பு கொண்டிருந்த சாதி அந்தஸ்தை, முஸ்லிம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் அந்தஸ்தாக மாற்றிக்கொள்ள முடியாது. அதேபோல், அவரது மத அமைப்பு மட்டும் அவர் அத்தகைய இடஒதுக்கீட்டைப் பெறத் தகுதியானவர் என்பதை, இறுதியாகத் தீர்மானிக்கவும் முடியாது' என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்திருக்கும் கருத்து கவலை தரக்கூடியது.

■ அரசியல் பின்னணி

'மதம் மாறினால், உனக்கு இடஒதுக்கீடு கிடையாது' என்று வெளிப்படையாக அறிவிக்கும் முடிவாகத்தான் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது. ஒருவர் முஸ்லிமாக மதம் மாறி, பி.சி.எம். பிரிவில் இடஒதுக்கீடு பெற்றால், ஏற்கெனவே அந்தப் பிரிவில் இருப்போருக்குத்தான் அவர் போட்டியாக இருப்பாரே தவிர, இதில் வேறு யாருக்கும் எந்தப் பிரச்சினையும் கிடையாது.

ஆனால், ஒரு தனிப்பட்ட முஸ்லிமோ அல்லது மார்க்கத் தலைவர்களோ, 'யாருக்கும் பி.சி.எம். சான்றிதழ் வழங்கக் கூடாது. மதம் மாறுவோருக்குச் சான்றிதழ் வழங்கினால், எங்களுடைய இடஒதுக்கீடு உரிமை பறிபோகும்' என்று எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பி.சி.எம். பிரிவின் சக உரிமையாளர்களே, பயனாளர்களே அரவணைத்து ஏற்றுக் கொள்ளும்போது, எந்த விதமான நியாயமும் இன்றி நீதிமன்றம் மறுதலிப்பது, சமூக நீதிக்கு எதிரானது.

தமிழ்நாட்டில் சட்டப்படி மதமாற்றத்தைத் தடைசெய்ய முடியாது. யாரும் கையைப் பிடித்து அழைத்துச்சென்று மதமாற்றமும் செய்ய முடியாது. ஆனால், தன் இறை நம்பிக்கையைச் சுயவிருப்பத்தின் பேரில், மாற்றிக்கொள்ளும் சிலரையும் தடுக்கின்ற ஏற்பாடாகத்தான் இந்தத் தீர்ப்பு அமைந்திருக்கிறது. 'நீ மதம் மாறினால் உனக்கு இடஒதுக்கீடு கிடையாது' என்று மிரட்டுவதாகத்தான் உள்ளது இந்தத் தீர்ப்பு. இந்தத் தீர்ப்பை நியாயப்படுத்துவோர், புரிந்துகொள்ள வேண்டியது ஒன்றே ஒன்றைத்தான். இந்துவாக வாழும் ஒருவர், இஸ்லாமிய வாழ்வியல் முறையைத் தழுவுகிறார் என்றால், அதற்கு ஒரே காரணம்தான் இருக்கிறது. அவர் தனது சாதி அடையாளத்தை விட்டொழிக்க விரும்புகிறார். தன் தலைமுறையினர் அந்த சாதி அடையாளத்தைச் சுமக்கக் கூடாது என்று கருதுகிறார். இப்போது உச்ச நீதிமன்றம் கொடுத்தி ருக்கும் தீர்ப்பு, அதற்கு நேரெதிராக இருக்கிறது. 'முஸ்லிமாக மாறி, இடஒதுக்கீடு உரிமையை இழந்துவிடாதே, உன் சாதி அடையாளத்தோடே நீ வாழவேண்டும், உன் தலைமுறையும் அந்த அடையாளத்தைத் தொடர வேண்டும்' என்பதாக இருக்கிறது இத்தீர்ப்பு.

அதே சமயம், 'மீண்டும் இந்து மதத்துக்குத் திரும்புபவர்களின் இடஒதுக்கீட்டு உரிமையையும் அவர்களின் முந்தைய அடையாளத்தை மட்டும் வைத்து முடிவு செய்ய முடியாது. அதற்குத் தனிப்பட்ட உண்மைச் சூழல்களை ஆய்வுசெய்ய வேண்டும்' என்றும் கூறியிருக்கிறது, உச்ச நீதிமன்றம். ஏற்கெனவே மதம் மாறிவிட்டவர்கள், மீண்டும் இந்து மதத்திற்குத் திரும்பினால், அங்கும் அவர்கள் ஏற்கெனவே பெற்ற உரிமையைப் பெற முடியாது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் தவிக்கும் கையறு நிலையே இந்தத் தீர்ப்பு.

இந்த அரசு சீராய்வு மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி இருக்கிறார் கழகத் தலைவர். சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் நீதித் துறை. ஒவ்வொரு தனிமனிதனும் இடஒதுக்கீட்டைப் பெறுவது அவர்களின் உரிமை. விலக்கிவைக்க ஆயிரம் காரணங்கள் சொல்லலாம். ஆனால், அவர்களின் தலைமுறை வாழ்வதற்கு அடிப்படைக் காரணம் ஒன்றுதான். அது 'இடஒதுக்கீடு'. இறை நம்பிக்கையை ஒருவர் மாற்றிக்கொள்கிறார் என்பதற்காக அதைத் தடுப்பது நீதி அல்ல, மாபெரும் அநீதி. ■

மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா ■

தெரிந்து கொள்வோம்

1962

பொற்செழியன் மரணம்!

1962-ஆம் ஆண்டு ஜூலை 19-ஆம் நாள், திருவில்லிபுத்தூரில் நடந்த விலைவாசி உயர்வு கண்டன மறியலில் கலந்துகொண்டு கைதானார், கழகத் தொண்டர் பொற்செழியன். சிறையில் கொடுக்கப்பட்ட மோசமான உணவு, அவரது உடல்நிலைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால், உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், 23-8-62 அன்று உயிர் துறந்தார்.



RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900